DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR**

OS.No : 379/2023 PW : 1

Name : சுப்பாநாயுடு என்கிற சுப்பிரமணி Age –

S/o : கண்ணம்மா நாயுடு Village

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

---

Date: 04.08.2025.

<u>**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**</u>

1) எனக்கு எழுத படிக்க தெரியாது. என்னுடைய தாய் மொழி தெலுங்கு. நானும், பிரதிவாதியும் சம்பவத்திற்கு முன்பு எனக்கும் பிரதிவாதிக்கும் 10 வருடத்திற்கு மேல் பழக்கம். நான் 10 லட்சம் ரூபாய் ஒரே தவணையில் நான் பிரதிவாதிக்கு கொடுத்தேன். தனித்தனியாக வெவ்வேறு நேரத்தில் பிரித்து கொடுக்கவில்லை. பிரதிவாதி தான் 2 1/2, 2 1/2 லட்சமாக பிரித்த தனக்கு கொடுக்கு வசதியாக இருக்கும் என்று போன்டை பிரித்து கொடுத்தார். பிரதிவாதி எனக்கு 4,05,000/– ரூபாய் 24.09.2020 அன்று 20,000,/– 24.10.2020–ல் 20,000/–, 20.11.2020–ல் 20,000/–, 20.12.2020–ல் 20,000/– 20.01.2021 என் மனைவியிடம் 25,000/– 6வது மாதம் 2021 வருடம் ரூ.1,00,000/–யும், 10.02.2022 அன்று ரூ.50,000/–, 14.03.2022 அன்று ரூ.50,000/– கே.ஜி கண்டிகையை சேர்ந்த சின்னா மூலமாக 5ம் மாதம் 2022 அன்று ரூ.50,000/–6வது மாதம் 2022 50,000/– மொத்தம் ரு.4,05,000/– என் வசம் சேர்த்துள்ளது என்று சொன்னால் தவறு. பிரதிவாதி என்னுடைய தாவாவில் அவருடைய சொத்தை விற்பதாக குறிப்பிட்டுள்ளார் என்று சொல்லியுள்ளேன். ஆனால் சொத்தின் விபரம் தெரியாது.

2) பிரதிவாதிக்கு ஒரே ஒரே விடு தான் உள்ளது என்றாலும் அதை விற்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. அவருக்கு நறைய சொத்துக்கள் உள்ளது. பிரதிவாதி தலைமை ஆசிரிய்ர தவரித்து வேறு எந்த வருமானமும் கிடையாது என்றால் அவருடைய மனைவிக்கு பெரிய கோவில்

உள்ளது நிர்வாகம் பிரதிவாதி குடும்பத்தினார் தான் நடத்தி வருகிறார்கள். பிரதிவாதியின் தாயார் இறந்த காலத்தில் நான் வழக்கறிஞர அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்று சொன்னால் அதை பற்றி எனக்கு தெரியாது. அவருக்கு பதில் அறிவிப்பு கொடுக்க எந்த வித கால அவகாசம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு அவ்ர வாங்கும் ரு.35000/– சம்பத்தில் செலவு போக பிடித்தம் போக உள்ள நிலையில் அவருக்கு கைசெலவு இல்லை என்றால் சரிதான். பிரதிவாதி கையில் 7 லட்சம் பணம் உள்ளதாக குறிப்பிட்டுள்ள சங்கதி உண்மையானது. அவதற்கு ஆவணம் என்னால் தாக்கல் செய்யமுடியாது. நான் இந்த வழக்கில் 2 சதவித வட்டி கோரி கேட்டது சட்டத்திற்கு புறம்பானது என்றால் அவரை தான் அந்த வட்டியை தறுவதாக ஒப்புக்கொண்டார்.

3) நான் கோரிய 10 லட்சத்தில் 4,05000/– போக மீதமுள்ள தொகைக்கு 9 சதவித வட்டி மட்டுமே செலுத்த பிரதிவாதி கடமைப்பட்டுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. நான் இந்த வழக்கில் தாக்கல் செய்த 4 பான்டுலும் வாதியின் தந்தை பெய்ர மற்றம் விலாசம் மற்றும் சாட்சிகளின் பெய்ர விலாசம் தெளிவாக இல்லை என்றாலும், என்ன காரணத்திற்காக பணம் வாங்கப்பட்டு குறிப்பிடவில்லை என்று சொன்னால் பிரதிவாதி தான் பான்டுகளை எழுதி எடுத்துவந்தார். வழக்கறிஞர அறிவிப்பிலும் நான் எந்த தேதியில் பிரதிவாதியிடம் பணம் கேட்டேன் என்று தெளிவாக குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் அஞ்சல் ஒப்புகை அட்டை தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் ஏற்கனவே பெற்ற 4,05,000/– மறைத்து முழு தொகைக்கு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S/d.S.Tasneem
I Additional District & Sessions Judge,
Tiruvallur.